தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-4-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலையாக இருக்கும்

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் தேங்காய் பெருமளவில் உற்பத்தியாகிறது. தற்போதைய நிலையில் அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் டன்னிற்கு ரூ.30800 வரை விற்கப்படுகிறது. சராசரியாக 550 - 600 கிராம் எடை அளவு கொண்ட ஒருதேங்காய் ரூ.16 முதல் ரூ.18 வரை விற்கப்படுகிறது. இந்த மாவட்டங்களில் உள்ள சந்தைக்கு தேங்காய் மற்றும் கொப்பரை வரத்து தற்சமயம் துவங்கியுள்ளது. ஆனால் இதுவரை கேரளா மற்றும் கர்நாடகவிலிருந்து தேங்காய் வரத்து துவங்க வில்லை. மேலும், ஆந்திர மாநிலத்தில் நடப்பாண்டில் தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளது. இந்த காரணங்களாலும் அதிகரித்துவரும் உள்நாட்டு தேவையாலும் வரும் மாதங்களில் தேங்காய் விலை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை கிலோவிற்கு ரூ.98– 99 வரை விற்கப்படுகிறது.

இச்சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலைபற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் நிலவிய தேங்காயின் விலை மற்றும் கொப்பரையின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கிவரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் பண்ணை விலை ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் டன்னிற்கு ரூ.31000 – ரூ.31500

அல்லது காய் ஒன்றிற்கு ரூ.17 முதல் 19 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. கொப்பரையின் விலை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிலோவிற்கு ரூ.99 முதல் ரூ.100வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மற்றும் மே, 2015ல் தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை நிலையாக இருக்கும். மேலும், கேரளா மற்றும் கர்நாடகா வரத்து மே மாதத்தில் இருந்து துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தில் விலை குறையவாய்ப்பு உள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கண்ட விலை தகவல் அடிப்படையில் தேங்காய் மற்றும் கொப்பரையை விற்பது பற்றிய முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்குதொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டுமற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி -0422-2431405


**மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்குதொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனைமற்றும் மலைத்தோட்டபயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசிஎண் - 0422-6611284


உதவி மக்கள் தொடர்பு அலுவலர்